உ

வந்தேமாதரம்

# மனித வாழ்க்கையும்
# காந்தியடிகளும்

திரு. வி. கலியாணசுந்தர மு [redacted]

எழுதியது

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை

1921

விலை அணா எட்டு

movement has only made manifest his latent character the elements of which Mr. Mudaliar describes with his usual lucidity and simplicity. I need not say anything about his style, for its charm is well-known to the Tamil Nadu. I wish the booklet a wide circulation among our peopie, so that they may learn to appreciate and act upon the great truths underlying Mahatmaji's wonderful life.

V. CHAKKARAI CHETTY

# முன்னுரை

1917ஆம் டிசம்பர்மீ 7உ முதல் 1920ஆம் ஜூலைமீ 22உ வரை நான் "தேசபக்தன்" ஆசிரிய பீடத்தமர்ந்து, என்னாலியன்ற தொண்டு செய்து வந்ததைத் தமிழுலகறியும். "தேசபக்தன்" ஆசிரிய பீடத்திலிருந்து என்னால் எழுதப்பட்ட கட்டுரைகளில் என்றும் நின்று பயன் தரத்தக்கனவாயுள்ள சிலவற்றைத் திரட்டி ஒழுங்குபடுத்தி நூல் வடிவாக அச்சிட்டு உதவுமாறு என்னைச் சில நண்பர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் விருப்பத்துக்கிணங்கித் "தேசபக்த"னில் என் கைப்பட எழுதிய கட்டுரைகளைத் திரட்டி ஒழுங்குபடுத்தித் "தேசபக்தாமிர்தம்" என்னும் பெயரால் பகுதி பகுதியாக வெளியிட நிச்சயித்து, முதல் பகுதி வெளியிட்டேன். முதல் பகுதியிற்போந்த கட்டுரைகள் கழிய, எஞ்சியுள்ள கட்டுரைகள் தொகுக்கப்படின், அவை இரண்டு பகுதிகளாகும். அவைகளை முற்றும் வெளியிடப் போதிய பொருளின்மை குறித்து வருந்துகிறேன்.

இரண்டாம் பகுதியை அச்சிடத் தொடங்கியபோது, நான் "தேசபக்த"னை விடுத்து விலகுமாறு நேர்ந்தது. இரண்டாம் பகுதியில் பெரிதும் காந்தியடிகளைப் பற்றியும், சத்தியாக்கிரகம், சுதேசியம் ஆகிய இவைகளைப் பற்றியும் எழுதப் பெற்ற கட்டுரைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதை முற்றும் அச்சிட்டுத் தமிழ்நாட்டுக்கு வழங்கும் பேற்றைக் கடவுள் எனக்கு அருள் செய்யாமையால், அப்பகுதியின் முதற்கண் சேர்க்கத் திரட்டப்பட்ட "மனித

வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்னுங் கட்டுரையை மாத்திரம் இச்சிறு நூல் வடிவாக வெளியிடலானேன். இவ்வாறே வேறு பல கட்டுரைகளையுஞ் சிறு சிறு நூல் வடிவாக வெளியிட நிச்சயித்திருக்கிறேன்.

"மனித வாழ்க்கையுங் காந்தியடிகளும்" என்னுங் கட்டுரை "தேசபக்தன்" முதல் வருட அநுபந்தத்துக்கென என்னால் எழுதப்பட்டது. அவ்வநுபந்தத்தில் இலை மறை காய் போல் மறைந்து கிடக்கும் "மனித வாழ்க்கையையும் காந்தியடிகளையும்" சிறு நூல் வடிவில் அமைத்து, தமிழ்நாட்டின் முன் கிளத்த வேண்டுமென எண்ணி இம்முயற்சியில் தலைப்பட்டேன். இந்நூற்கண் போந்துள்ள கட்டுரை பெரிதும் அநுபந்தத்திலுள்ளவாறே அச்சிடப்பட்டிருக்கிறது. ஆனால் காலத்துக்கேற்ற சில மாறுதல் இடையிடையே செய்யப்பட்டிருக்கின்றன.

இந்நூன் முகத்தில், காந்தியடிகள் மீது நான் பாடியுள்ள வாழ்த்தும், அன்பப்பேறும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலில் விளங்கும் பொருள் மூன்று (க) மனிதப் பிறவியின் சிறப்பும், மனிதன் எவன் என்பதும் (உ) மனித வாழ்க்கையின் நோக்கம் (ங) மனித வாழ்க்கைக்கு இலக்கியமனிதர் காந்தியடிகள் என்பது. இம்மூன்றும் மக்கள் பேற்றுக்கு இன்றியமையாதன என்பதை நான் விரித்துக் கூற வேண்டுவதில்லை. இந்நூல் தமிழுலகிற்குப் பயன்படுமாறு ஆண்டவன் அருள் செய்க. காந்தியடிகள் வாழ்க. வந்தேமாதரம்.

திரு. வி. கலியாணசுந்தரன்.

# காந்தியடிகள்

## வாழ்த்து.

சாந்தமய மெனவிலங்குந் தனிப்பொருளை யுளத்தென்றும்
ஏந்தியுயிர் தமக்கெல்லா மினிமைசெய வுலகிடையே
போந்தகுண மலையாகும் புனிதநிறை கடலாகுங்
காந்தியடி யிணைமலரைக் கருத்திருத்தி வழுத்துவமே.

## இன்பப் பேறு.

என்னை அறியா என்னுளங் கொண்ட
மயலொடு கலவா இயல்பெனுந் தேவி,
எழுந்தொரு பொழுது செழுந்தமிழ்க் குரலால்
உற்ற யாக்கையின் உறுபயன் யாதென”
பொறித்தனள் ஒருவினா; கருத்தினில் நின்றது
அலைத்தும் ஆட்டியும் குலைத்த தென்னை;
உண்மை தெளிய கண்ணினன்; கால்கள்
நடந்தன உணரேன்; கடந்தனன் வழிபல
அந்தி மாலை சிந்தையிற் சென்றலும்
கடற்கரை கண்டேன்; இடமென விருந்தேன்

உருகிய செம்பொன் கருகிய வானும்
பளிங்கு கோய்யென இலங்குவெண் மணலும்
நீணிறக் கடலும் நீளின அலையும்
இறைவன் வடிவா யென்னை ஆண்டன
நிறைகாண் பொழுதில் நிலவிழிப் பொழிந்தே
உறக்கம் புகுத்தும் உணர்வழி விலையால்
அவ்வுணர் வெளியில் செவ்விய மெல்லியல்
தும்பை யன்னவோர் தூசணிந் தெதிரே

எழுதரும் வடிவோ டெழில்வெண் டாமரை
பூத்தது போலப் பொலிந்தன என்றே;

அன்னவள் அடியை அன்புடன் தொழுதே
என்னிலை யுணர்த்த; எழிலணங் கவளும்
மைந்த! கேட்டி இந்தமா நிலத்தில்
உற்ற யாக்கையின் உறுபயன் யாதென'
வருந்தல் வேண்டாம், திருந்து நல்வழி
இன்று கூறுவல், நன்று கேட்டி!
மக்கள் யாக்கையே மிக்கது மிக்கது
அன்னதன் பயனை இன்னதென் றுணர
இல்லம் விடுத்துச் செல்லவும் வேண்டாம்
காடுகள் பலவும் ஓடவும் வேண்டாம்

மலைகளேறி அலையவும் வேண்டாம்
காற்றை யீர்த்து மாற்றவும் வேண்டாம்
மனைவி மணந்தும் மக்களை யீன்றும்
இனத்தொடு வாழ்ந்தும் இருந்தொழில் செய்தும்
உண்பன உடுப்பன உண்டும் உடுத்தும்
நாட்டை விடாது வீட்டி லுறைந்தும்
பிறவிப் பயனைப் பெற்று வாழலாம்;
இலக்கிய மிதற்கோன் றியம்புவன் கேட்டி
கலக்கமி லுளத்தலைக் காவளர் பெறுக;
இந்தியா ஈன்ற மைந்தருள் ஒருவன்

கூர்ஜர நாடன் கூர்த்த மதியினன்
தாய்மொழி காத்து நாய கனவன்
தன்னுயிர் போல மன்னுயிர் போற்ற
நல்லற மென்னும் இல்லற மேற்றோன்
மக்களை யீன்று மிக்கவ னானோன்

செயற்கை வெறுத்த செம்மை யாளன்
இயற்கை இன்பமே யின்பெனக் கொள்வோன்
உண்மை கடைப்பிடித் தொழுகுஞ் சீலன்
உண்மைகா ரணமா உயிரையும் விடுவோன்
வானக் துளங்கினும் மீனம் படினும்
மலைகள் வீழினும் அலைகள் பொங்கினும்
தன்னிலை மாறாத் தன்மை யாளன்
உலகி லுள்ள அலகிலா உயிர்கள்
தன்னுயி ரென்னும் தருமம் பெற்றவன்
பிறர்க்குக் கேடு மறந்துஞ் சூழான்
அன்புடை யார்பிறர்க் கென்பு முரியர்
என்னு மொழிக்கு இலக்கிய மானோன்
உண்மைஅஞ் சாமை ஒண்பே ராயுதம்
தாங்கி என்றும் ஈங்கு முரண்படு
தேக சக்தியை ஏக சக்தியாம்
ஆன்ம சக்தியால் அடக்கும் வீரன்
சினத்தை யொழித்த இனத்தவ குறவோன்
யாண்டுத் துன்பம் எவர்க்கு நேரினும்
ஆண்டே அவனுடல் அணையு மன்றே ;
அவனுடல் மற்றவர் உடலே யாகும்
அவன்பொருள் மற்றவர் பொருளே யாகும்
அவனுயிர் மற்றவர் உயிரே யாகும்
தனக்கென வாழாத் தன்மை பெற்றவன்
அன்பே வடிவாய் அமர்ந்த அண்ணல்
இன்புபிறர்க்கே உழைத்தல் என்போன்
சாந்த மயமெனுங் காந்திப் பெயரான்
அற்றவன் அடியைப் பற்றுவை யாயின்

ஐய! யாக்கையின் பயனது விளங்கும்"
நல்லான் பகர்ந்ததும் பொல்லா விழிப்பால்
ஒழிந்தது உறக்கமும் கழிந்தது இரவும்
அலையொலி யோடு வலைஞர்கள் ஒலியும்
கலைத்தன நிலையை; அலைந்த உளத்தொடு
வீட்டைச் சேர்ந்து நாட்டினன் சிந்தையைக்
காந்தி யடிகளின் காந்தி யடிகளில்;
சேமம் ஆக்கமும் ஒருங்கு செம்பொருளும்

ஒன்றென மதிக்கும் நன்றுசேர் உண்மையும்
பெற்ற யாக்கையால் மற்றவர்க் குழைத்தலில்
இன்பப் பயனுண் டென்னுமோர் உண்மையும்
கண்டு யானுந் தொண்டுசெய் கின்றேன்;
நம்மை யீன்ற அம்மை உரிமையை
இழந்து வாடும் இந்நாள் இந்நாள்
காந்தி யாவணை காந்தி யாவணை
இன்போ டிழைக்க என்னுடன்
சேர வாருந் செகத்து ளீரே.

# மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

## மனிதன்

உலகத்திலே உயிர்கள் வினைக்கீடாகத் தாங்கும் பிறவிகள் பல. அவைகளுள் சிறந்தது மனிதப் பிறவியேயாகும். "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்றும், "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்றுந் தமிழ்வேதங் கூறுகிறது. "அரிது அரிது மானுடராதல் அரிது" என்னும் ஔவையார் வாக்கை அறியாதாரில்லை.

மனிதப்பிறவி சிறந்து விளங்குங் காரணத்தைச் சிறிது ஆராய்வோம். அநாதியாக உள்ள உயிர்களில் எவ்வித வேற்றுமையும் இல்லை. உயிர்கள் உடலைத் தாங்கிய பின்னரே அவைகளிடத்துப் பல வகை வேற்றுமைகள் தோன்றுகின்றன. வேற்றுமை உயிரைப்பற்றியும் நிற்கவில்லை; உடலைப்பற்றியும் நிற்கவில்லை. உயிரும் உடலும் ஒன்றுபட்டு வாழ்க்கையுறுங் காலத்தே உயிர்களில் வேற்றுமை என்பது உண்டாகிறது. உயிரும் உடலும் ஒன்றுபடுங் காலத்து அறிவு விளக்கம்

பெறுகிறது. அவ்வறிவு விளக்கம் உடலளவாகவும் கரண அளவாகவும் திகழ்கிறது. அது பற்றியே உயிர்கள் கூட்டம் ஆறுவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தொல்காப்பியம்-பொருளதிகாரம் - மரபியலில் உயிர்கள் அறுதிறமாக வகுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவை ஓரறிவுயிர்களாகிய தாவரமுதல் ஆறறிவுயிர்களாகிய மனிதர் ஈறாக உள்ளனவேயாம். மனிதனுக்கு அடுத்தபடியாக உள்ளது மிருகம். அதற்கு ஐந்தறிவு உண்டு. மனிதனுக்கோ ஆறறிவு உண்டு. அவ்வாறாவது அறிவே மன உணர்வு எனப்படும். அவ்வுணர்வு மிருகங்களிடத்தும் மற்ற வுயிர்களிடத்தும் விளக்கமின்றிக் கிடக்கும். மனிதப் பிறவியிலேயே அது விளக்கமுறுகிறது. அது பகுத்தறிவு என்றுஞ் சொல்லப்படும். சுவை (ரசம்) ஒளி (ரூபம்) ஊறு (ஸ்பரிசம்) ஓசை (சப்தம்) நாற்றம் (கந்தம்) என்னும் இவ்வைந்தறிவும் மனிதனுக்கும், மிருகத்துக்கும் பொதுவாக இருப்பன. பகுத்தறிவென்னும் மன உணர்வொன்றை மனிதன் பெற்றிருக்கின்றமையால், அவன் மிருகத்தினும் மேலாகப் போற்றப்படுகிறான். மனவுணர்வு பெறாத மனிதன் மிருகத்தைப் போன்றவனேயாவன். இக்காரணம் பற்றியே மனிதர்கள் இருதிறமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு கூட்டத்

தவர் மக்களெனப்படுவர்; மற்றொரு கூட்டத் தவர் மாக்களெனப்படுவர். முன்னவர் மன உணர் வென்னும் ஆறாவதறிவுடையவர். பின்னவர் அது விளங்கப் பெறாதவர். "மக்கள் தாமே ஆறறி வுயிரே," "மாவுமாக்களும் ஐயறிவினவே" என்பது தொல்காப்பியச் சூத்திரம். சரித்திர காலத் துக்கு முன்னரே நந்தமிழ் மக்கள் மெய்ப்பாட்டா னும், அகத்திணையானும் உயிர்களின் புறநிகழ்ச்சி உள்நிகழ்ச்சிகளை அளந்து, உயிர்க்கூட்டங்களை, அவைகளின் அறிவு விளக்கத்துக் கேற்றவாறு வகுத்திருக்கின்றார்கள். அத்தகைத் தமிழ்மக்க ளின் நுண்ணறிவு இது காலை பாழ்பட்டதே என்று இரக்கமுறாது வேறென் செய்வது? மனிதப்பிறவி யில் மனவுணர்வென்னும் ஆறாவதறிவு விளக்க முற்று மிளிர்தலால், அப்பிறவி விழுமியதென எவ ராலும் போற்றப்படுகிறது.

உலகத்தில் மனிதப்பிறவி தாங்குவோரனைவரிடத் திலும் ஆறாவது அறிவு விளக்க முறுவதில்லை. ஆறாவது அறிவு விளங்கப்பெற்றவன் தன்னுயிர் போல் மன்னுயிரைப் பார்ப்பன். இரக்கமே அவன் உள்ளத்தில் குடிகொண்டு நிலவும். அவன் தனக்கென்று உலகத்தில் வாழான்; தன் வாழ்க்கை மற்றவர்க்கே என்று கருது வன். அவன் கொலை களவு கள் காமம் பொய்

என்னும் ஐம்பெரும் பாவங்களுக்கு அஞ்சுவன். அவன் காரணங்களெல்லாம் அன்பு மயமாகப் பொலியும். மிருக குணங்கள் அவனிடத்தில் தோன்றுவதருமை. அன்னோன் பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகப் பாவிப்பன். இன்னோரன்ன குணமுடைய ஒருவனையே மனிதன் என்று கூறலாம்.

மனிதப் பிறவியைப் பெற்றுள்ளோர் பலர் தந்தேகத்தையே பொருளாக்கொண்டு தந்நலத்தைக் கருதி உலகத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மிருகங்கள் போன்றவர்கள்; மாக்கள் எனப்படுவார்கள். இக்கூட்டம் உள்ளமட்டும் உலகத்தில் சண்டைகளும், நியாயஸ்தலங்களும் பெருகிக்கொண்டேயிருக்கும். இப்பொழுது உலகத்தில் பலபேர் மனிதச்சட்டை தாங்கித் திரியினும் அன்னோர் இன்னும் மனிதராகவில்லை. உலகத்தில் மக்கள் பெருகி மாக்கள் அருகுநாள் எந்நாளோ?

## வாழ்க்கை

### கீதாரகசியம்

உலகத்திலுள்ள சிறந்த நூல்களுள் பகவத்கீதையும் ஒன்று. அந்நூலின் திரண்டபொருள் உலகத்தில் மனிதன் பிறர்க்காக வாழவேண்டுமென்பது. அவ்வுண்மையை ஈண்டுச் சுருக்கச்சொல்லி விளக்க வைப்பது நலமெனத் தோன்றுகிறது.

அருச்சுனன் முதன்முறை குருக்ஷேத்திர யுத்தகளத்தை யடைந்ததும் எதிரிகளைச் சிறிது உற்றுநோக்கி "அந்தோ! தோன்றி நின்று அழி யுந்தன்மையதாகிய இம்மண்ணுலக வாழ்வின் பொருட்டு என்னருமைப் பாட்டனையும், குருவை யும், சகோதரர்களையுங் கொல்ல என்மனம் ஒருப் பட்டதல்லவா! இவர்களைக்கொன்று உலகையாள யான் எண்ணியது அறியாமை. அவர்களே உலகையாள்க. யான் துறவுபூண்டு காட்டிற்குச் செல்கிறேன்" என்று எண்ணினான். அவ்வெண் ணத்தால் அருச்சுனன் உள்ளந் தளர்ந்தது; வில் லுஞ்சாய்ந்தது. அவனிடத்திருந்த மன எழுச்சி யும் ஒடுங்கிற்று. இங்ஙனம் அருச்சுனன் சோர் வுற்றதைக் கண்ட தேர்ச்சாரதியாகிய கண்ண பிரான் அவனை நோக்கி "நண்பனே! என்ன? உன்னிடத்தில் ஊக்கங் குறைந்திருப்பதாகத் தெரி கிறது. சிறிது தளர்ச்சியுற்றிருக்கின்றாய் போலும்! அத்தளர்ச்சி நிகழ்ச்சிக்குக் காரணமென்னை?" என்று வினவினர். அதற்கு அருச்சுனன் "சுவாமி நிலையுதலில்லாத உலக இன்பத்தை நான் நுகரும் பொருட்டுப் பாட்டன் குரு முதலியவரைக் கொல்ல என் மனம் எழவில்லை" என்றான். கண்ணபிரான் புன்னகைபுரிந்து "நண்பனே! உன்னிலைக்கு இரங்குகிறேன். 'பாட்டன் முதலியோரைக்

கொன்று நான் உலகத்தையாள வேண்டும் என்ற எண்ணங்கொண்டு வந்த அருச்சுனனை யான் வெறுக்கிறேன். அவன் அழிக. 'உலகத்தில் கொடுங்கோல் தாங்கி உயிர்களை வருத்தி வரும் துரியோதனாதியர்களைக் கொன்றால் உலகத்தில் தருமம் வளரும்' என்ற எண்ணங்கொள்ளும் அருச்சுனனை யான் விரும்புகிறேன்; அவ்வருச்சுனன் எழுக" என்றார். இவ்வருள்மொழிகள் அருச்சுனன் செவியிலுற்றதும், அவன் உள்ளமும் கரணங்களும் ஒருவகை மாறுதலடைந்தன. அவன் உலகத்தில் தன் பொருட்டுக் கருமங்களைச் செய்தல் அறியாமை என்பதை யுணர்ந்து கொண்டான். பிறர் பொருட்டுக் கருமங்களைச் செய்வதே அறிவுடைமை என்ற நிட்காமிய உணர்ச்சி அவன்பால் அரும்பிற்று. இத்தகைய உணர்ச்சி பெறுவதே இரண்டாவது பிறப்பை அடைவதாகும். இவர்களே இருபிறப்பாளர் எனப்படுவார்கள். ஆன்மபோத மின்றித் தம்பொருட்டு உலகில் வாழுஞ் சிலரை இருபிறப்பாளர் என்று கூறுவது பெரும்பிழை. கண்ணபிரான் உபதேசங் கேட்டதும் தன் பொருட்டு யுத்தம் புரியவேண்டும் என்ற அருச்சுனன் மாண்டான். பிறர் பொருட்டு வாழவேண்டும் என்னும் அருச்சுனன் பிறந்தான். அருச்சுனன் தேரின்மீதே

அமர்ந்து கொண்டிருந்தான்; அவன் வில்லையுந் தாங்கிக்கொண்டிருந்தான். அவன் போர்க்கோல முமம் பொன்னுபரணமும் இருந்தபடியே இருந் தன. அருச்சுனன் நிறத்தில் மாறவில்லை; உட லில் மாறவில்லை; அமைப்பில் மாறவில்லை. ஆனல் அவன் எண்ணத்திலும் செயலிலும் மாறுதலடைந் தான். அவன் எண்ணமும் செயலும் பிறர்க்கே பயன்படுவனவாயின.

மனிதன் எத்தகை ஒழுக்கமுடையனுயினும் ஆக; எத்தகைத் தொழின்முறையில் தலைப்பட்டவ னுயினும் ஆக; அரசனுயிருப்பினும் இருக்க; ஆண்டியா யிருப்பினும் இருக்க; நியாயாதிபதி உத்தியோகஞ் செய்யினுஞ்செய்க; வாயில் காப்பு வேலை செய்யினுஞ் செய்க; இல்லொழுக்கம் மேற்கொள்ளினுங் கொள்க; துறவொழுக்கம் மேற் கொள்ளினுங் கொள்க; எவரெவர் எந்நிலை யில் நிற்பினும் நிற்க; எவ்வேடங் கொள்ளினுங் கொள்க. ஞானம் பெற எவரும் காட்டுக்குப் போக வேண்டுவதில்லை. நடுநாட்டில் மனைவிமக் கள் உற்ருர்பெற்ருர் உறவினர் இவர்களோடு வாழ்ந்தும், பலவகைத் தொழில்களைச் செய்தும் ஞானியாகவே யிருக்கலாம். வேண்டுவது ஒன்றே. அது நாம் பிறர்க்காக வாழ்கின்ருேம் என்ற எண் ணங்கொண்டு வாழ்வதேயாகும்.) மனைவியை

மணஞ் செய்வதும் தன்பொருட்டென்று கருத லாகாது. பிள்ளைகளைப் பெறுவதையும் அங்ஙனே கருதல் வேண்டும். தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்கின்றவனே மனிதன். அவனது வாழ்க்கையே வாழ்க்கை. பகவத்கீதையின் உள்ளக்கிடக்கை இதுவே. திருவள்ளுவர் கொள்கையும் இதுவே. இதுகாறுங் கூறியவாற்றான் மனிதன் எத்தகை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பது அறிவுறுத்தப்பட்டது.

பிறர் பொருட்டு வாழவேண்டுமென்னும் எண்ணத்துக்குக் கருவியாக நிற்பது ஆறுவது அறிவாகும். அவ்வறிவு விளங்கப்பெற்ற ஒருவன் தேகத்தைப் பொருளாகக் கொள்ளான். அவன் பொறுமையில் பூமியை வெல்வான்; பிறர்க்குத் துன்பம் கனவிலுங் கருதான்; துன்பங்களைத் தானே ஏற்றுக்கொள்ள ஒருப்படுவான். இதுவே பொறுமை எதிர்ப்பு என்பது. பொறுமை எதிர்ப்பில் பண்பட்ட ஒருவனை வெல்ல எவராலும் இயலாது. பொறுமை எதிர்ப்பு என்பதும் ஆத்ம சக்தி என்பதும் ஒன்றே. ஆத்மசக்தியை அடக்கப் பஞ்ச பூதங்களாலும் இயலாது. பூரண ஆத்மசக்தியுடையவன் உலகத்தையே தன் வழிப் படுத்துவான். அவனை ஆயுதங்கள் ஒன்றுஞ் செய்யா; சேனைகள் ஒன்றுஞ் செய்யா. அவனைப்

பாம்பு புலி கரடி சிங்கம் முதலிய கொடிய விலங்கு களும் வணங்கிச் செல்லும். உலகை ஆளும் அரச னும் அவனுக்கு வணக்கஞ் செய்வான். ஆத்ம சக்தி கைவரப் பெற்றவன் உள்ளத்தில் ஆண் டவன், தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றுவன். அவன் உள்ளத்தைத் திருக்கோயில் என்றுங் கூற லாம். அவனைக் கடவுளாகவுங் கொண்டு வழி படலாம்

**சத்தியாக்கிரகிகள்**

பண்டைக் காலத்தில் நமது பாரத நாட்டில் ஆத்ம சக்தி விளங்கப்பெற்றவர் எண்ணிறந்தவர் இருந்தனர். அன்னார் காடுகளிலும் மலைகளிலும் சிறிதும் அச்சமின்றி வாழ்ந்து வந்தனர். அவர் கள் வழி உலகம் நடைபெற்று வந்தது.

காமதேனுவின்மீது கொண்ட விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள விசுவாமித்திரன் தன் குருவாகிய வசிஷ்டரோடு எதிர்த்துப் போர்புரிந்து தோல்வியுற்றதை யறியாதார் யார்? விசுவா மித்திரன் விடுத்த அம்புகள் வசிஷ்ட முனிவரை என்ன செய்தன? அவைகளைத் தடுக்க அவர் ஏதாயினும் முயற்சி செய்தனரோ? வசிஷ்டரது ஆத்மசக்தியின் முன்னே விசுவாமித்திரன் தேக சக்தி என்னசெய்தது? அவ்விசுவாமித்திரன் வசிஷ் டரது ஆத்மசக்திக்கு முன்னே தனது தேகசக்தி

இரும்புண்ட நீரைப்போலாயதைக்கண்டு தானும் ஆத்மசக்தியை வளர்க்க முயன்று முனிவனாயி னான். விசுவாமித்திரன் ஆத்ம சக்தியுடைய முனிவனாகிய பின்னர், அவனை மன்னர் மன்னரும் வாழ்த்தி வணங்கினர். பத்துத் திக்கிலும் தன்னாணைசெலுத்தி ஆட்சி புரிந்த தசரதன் விசுவாமித்திர முனிவனைக் கண்டதும் தன்னரி யாசனம் விட்டிழிந்து, முடிதாழச் சேவித்து, அவனை அரியாசனத் திருத்தித் தான் கைகட்டி, வாய்புதைத்துப் பணி செய்ததாக இதிகாசங் கூறுகிறது.

பிரகலாதன் என்னும் ஞானக்குழந்தையை மிருக சுபாவமுடைய அவன் தந்தை பல்லாற்று னுந் துன்புறுத்தியதை அறியாதாருளரோ? பிரக லாதன் தன் தந்தை செய்த கொடுமைகளை எந்தச் சக்தியால் தடுத்தான்? அவன் ஆயுதங்களை உப யோகிக்கவில்லை; ஆத்மசக்தியையே கையாண் டான். அவனை ஆயுதங்களும் அழிக்கவில்லை; பூதங்களுங் கொல்லவில்லை. தந்தை விடுத்த யானையும் அவனைத்தொழுது சென்றது. அவ னுக்கு ஆலமும் அமுதமாயிற்று. ஆத்மசக்தி யின் வல்லமையைப் பாருங்கள்!

தமிழ் நாட்டில் திருநாவுக்கரசு சுவாமிகள் என்றவொரு பெரியார் இருந்தார். அன்னார்

ஆத்மஞானம் விளங்கப்பெற்ற முனிவராகிப் பாடலி புத்திரந் துறந்து, திருவதிகை என்னுந் திருப்பதியடைந்து, கட்டின்றி இன்பவாரிதியில் திளைத்துக் கொண்டிருந்தபோது, மன்னன் அவர் ஆன்ம உறுதியை அறியாது, அமைச்சர்களை ஏவி, அவரை அழைத்து வருமாறு ஆணை தந்தான். அங்ஙனே அமைச்சர்கள் போந்து திருநாவுக்கரசரை அழைத்தார்கள். அப்பொழுது நாவரசர்,

" நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே."

" என்றுநாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தி லெமக்கெதிரா வாருமில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோமன்றே
புறப்பிணியார் சேறலொழிந்திட் டோடிப்போனார்

பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோமே.''

என்று பதிலிறுத்தார். பின்னர்ப் பாடலிபுத் திரத்து வேந்தன் சுவாமிகளைக் கொல்லப் பல சூழ்ச்சிகள் செய்தான். அம்மன்னன் நஞ்சு கலந்த பாலைச் சுவாமிகளுக்குக் கொடுத்தான்; யானையை அவர் மீது ஏவினான்; நீற்றறையில் அவரை இருத்தினான்; இறுதியில் திருநாவுக் கரசரைக் கல்லோடு பிணித்துக் கடலில் விடுத் தான். இச்செயல்கள் யாவும் மன்னன் என்னும் முனைப்பால் செய்யப்பட்டவை. இவைகளை ஏற் றுக்கொண்டவர் எத்தகையினர்? முனைப்பில்லா அன்பர்; பொறுமையாளர்; ஆன்ம உறுதியுடைய வர்; எப்பொருளிலும் ஈசன் இருக்கும் உண்மை கண்டவர்; இவர் முன்னே நஞ்சு பாலாயிற்று; யானை வணக்கஞ் செய்தது; நீற்றறை தாம ரைத் தடாகமாயிற்று; கல்லுந் தெப்பமாயிற்று. இத்தகைக் கேடு சூழ்ந்த வேந்தனுக்குத் திருநாவுக் கரசு சுவாமிகள் மனமொழி மெய்களால் எத் தகைக் கேடுஞ் சூழவில்லை. இதுவே பொறுமை எதிர்ப்பு என்பது. ஆத்மசக்தியின் முன் ஆன்ம போதம் வலியிழந்தன்றோ கிடக்கும்? முனைப் புடையோர் செயல் முனைப்பற்றோரை என் செய்யும்?

திருநாவுக்கரசு சுவாமிகள்,

" வானந் துளங்கிலென் மண்கம்ப
மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர்
வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா வொருவனுக்
காட்பட்ட வுத்தமர்க்கே".

" மண்பா தலம்புக்கு மால்கடல்
மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர்
வீழினு மஞ்சல்நெஞ்சே
திண்பா னமக்கொன்று கண்டோந்
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுள்
சுடரான் கழலிணையே "

என்றருளிச்செய் திருத்தலைக் காண்க.

உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்து தொண்டு புரிவோர் இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்ருகக் கருதுவர். அன்னுர் இன்பம் வரும்போது இறுங்களி எய்தார்; துன்பம் வரும் போது துயருற்று வருந்தார். அவர் எல்லாம் ஆண்டவன் செயல் என்றிருப்பர்.

" அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமுங்

குன்றே யனையாய் என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூறு எனக்கு உண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே ''

என்று மாணிக்க வாசக சுவாமிகளுந் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

பிறர்க்குக் கடமைப்பட்டுப் பணி செய்ய வெளி வரும் ஒருவனுக்குத் தாய் தந்தை குரவன் இறைவனே; நிராசையே அவனுக்கு மனைவி; எல்லா உயிரும் அவன் பிள்ளைகள்; அவனைப்போன்ற தொண்டர்கள் அவனுடைய உறவினர்கள். வெளியிலே அட்டப்படும் அன்னமெல்லாம் அவனுடையன. பூமியே அவனுக்குப்பாய். இறைவன் பொருளெல்லாம் அவன் பொருள். அவனுக்குச் சிறைவாசமும் பிறவாசமும் ஒன்றே. இச்சீரிய குணங்கள் யாவும் ஆத்ம சக்தி விளங்கப் பெற்றவனிடத்து ஒளிரும்.

கிறிஸ்துநாதர், மன்னன் ஏவலால் சில கொலையாளிகள் தம்மைச் சிலுவையில் அறைந்தபோதுஞ் சினங்கொண்டு அவர்களுக்கு ஏதாயினுந் தீங்கு செய்தனரோ? சாந்தமயமாக உள்ள இறைவன் திருவருளை நினைந்து நினைந்து பொறுமை வடிவாகத் திகழ்ந்தனர். மகமதுவும் தம்மைத் துன்

புறத்தியவருக்கு ஒரு தீங்குஞ் செய்யவில்லை. புத்தர் பெருமான் "ஒரு கொலைஞன் ஒரு கூரிய வாள் தாங்கி உன் தோள் மேல் ஏறி உன்னைச் சிறுகச் சிறுகக் கொந்தினலும் நீ அதைத் தாங்கிக் கொண்டு பொறுமையாகவே யிரு; அவ னுக்குத் தீங்கு செய்யாதே" என்று கூறி யிருக் கிறார். மனிதன் என்பவன் பொறுமையைக் கை ஆள்பவனே! அக்குணமுடைய ஒருவனே பிறர்க் குழைக்கும் பெற்றியனவன்.

### பொறுமை

மனிதன் எக்குணத்தையும் முயற்சியால் பயிற்சி செய்யக்கூடும். ஆனல் பொறுமைக் குணத்தைப் பயிற்சி செய்தல் அருமையினும் அருமை. பொறு மை என்பது எளிய பொருளன்று. பொறுமை யைப் பெற்றவன் கடவுளைப் பெற்றவனவன். பொறுமை வேறன்று; கடவுள் வேறல்ல; இரண் டும் ஒன்றே. ஈசுரானை வேதம் 'சாந்தம் சாந்தம்' என்று கூப்பிடுகிறது. மனிதன் பொறுமை என் னும் பொருளைப் பெறவே படைக்கப்படுகிறான். மனிதன் பிறந்த நாள் முதல் இறக்கு நாள்வரை பொறுமையை வளர்க்க வேண்டிய முறைகளைப் பெரிதுங் தன் வாழ்க்கையில் அனுஷ்டித்துக் கொண்டு வரவேண்டும்.

அம்முறைகள் பல. அவைகளை ஒன்றுகவுங் கொள்ளலாம். அதுவே "தருமம்" என்பது.

அறநெறியடைய மனிதன் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் நான்கு. அவை கீழ்ப்படிதல், நிறைவு (திருப்தி), உண்மை, அன்பு என்பன. இந்நான்கில் பிற அற ஒழுக்கங்கள் அடங்கிவிடும். பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் கீழ்ப்படிந்து நடத்தலால் செருக்கு முனைப்பு முதலிய கொடுமைகள் அறவே ஒழியும். உள்ள நிறைவால் அவா ஒடுங்கும். உண்மையால் உறுதியும் அஞ்சாமையும் உண்டாகும். அன்பால் பிற உயிர்களிடத்து இரக்கந்தோன்றும். இவைகளை இளமை தொட்டே பயிற்சி செய்து வரல்வேண்டும். தாய் தந்தையர்கள் இக்குணங்கள் தங்கள் பிள்ளைகள் உள்ளத்தில் பதிய வேண்டிய கல்வியறிவையும் கட்டுறவையும் கொடுத்துதவல் வேண்டும். அறிவு குணஞ் செயல் அரும்பிப் பண்படாத இளைஞர்கள் காண்பனவும் கேட்பனவும் கருதுவனவும் மேற்கூறிய குணங்களை உண்டாக்குவனவாக இருத்தல் வேண்டும். அவர்கள் பேசுவனயாவும் அக்குணங்களைப் பயப்பிப்பனவாக இருத்தல்வேண்டும்.

ஒருவன் மேற்போந்த நற்குணங்களைப் பெறவே நல்லறமென்னும் இல்லறத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அறநூல்கள் கூறுகின்றன. மக்களிடத்துள்ள மிருக சுபாவங்களை ஒழிப்பதே இல்லறமென்பது. மனிதன் வாழ்க்கையைத் தூய

மை படுத்துவதும் அவ்வறமே. மனிதன் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொறுமை என்னும் பொருளை ஈபவல்லது இல்லறமென்று பல பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். பொறுமை என்னும் பொருளைப் பெறுவதற்கு இல்லறஞ் சிறந்த வழியென்பதை நண்பர்கள் அறிவார்களாக. இல்லற வழியல்லாப் பிறவழிகளைக் கடைப்பிடித்தொழுகியும் பொறுமை என்னும் பொருளைப் பெறலாகும். ஆனால் அவை எளியனவல்ல. எவ்வழியிலேனும் மனிதன் தன் வாழ்க்கையில் பெறவேண்டுவது ஒன்று. அது பொறுமை என்பது.

## காந்தியடிகள்

பண்டைக் காலத்தில் பொறுமைக்கு உறையுளாயிருந்தவர் பல்லோர். இக்காலத்து அத்தகையாளரைக் காண்டல் அருமையாக இருக்கிறது. அக்கூட்டத்தார் அருகி விட்டதற்குக் காரணம் மேல்நாட்டுக் கல்வியும் பிறவுமாம். மேல்நாட்டார் செயல்கள் யாவும் ரஜோகுணத்தை எழுப்புவன; சாந்த குணத்தை அழிப்பன. அன்னார் மொழியொலி, கல்வி, இசைக்கருவி, உணவு, உடை முதலியன மனிதனது சாந்த குணத்தை அருகுவித்து, ரஜோகுணத்தைப் பெருகுவிப்பன. இவைகளால் இந்தியாவும் பொறுமை என்னும்

புனிதப் பொருளை இழந்துகொண்டு வருகிறது. இந்நாளிலும் இந்தியாவில் பொறுமையாளர் இலை மறை காயெனப் பலர் இருக்கின்றனர். அவருள் ஒருவரை உலகம் அறிந்திருக்கிறது. அவரது வாழ்க்கை மனித வாழ்க்கைக்கு இலக்கியமாக விருப்பது. மனிதராக விரும்புவோர் அனைவரும் அவரது வாழ்க்கை முறையைப் பின்பற்றலாம்.

அவ்வொருவர் யாவர்? அவரே மஹாத்மா காந்தி என்பவர். அநாகரிகம் என்னும் பிறநாட்டு இருளால் இந்தியா விழுங்கப்பட்டு வரும் இந்நாளில் அவ்விருளைப் போக்கக்கூடிய ஒரொளியை - காந்தியை அளித்த ஆண்டவனுக்கு முதலில் வணக்கஞ் செய்கிறேன். பாரத மாதாவின் திருவயிற்றில் தோன்றிய முனிவர்கள் குணங்களுஞ் செயல்களும் மகாத்மா காந்தியினிடத்துப் பொலிகின்றன. காந்தியடிகள் எந்நெறி பற்றி ஒழுகி மகாத்மாவாயினர் என்பது ஆராயத்தக்கது.

## கல்வி

மகாத்மா காந்தி ஒரு செல்வர் வயிற்றில் பிறந்தவர். அப்பெரியார் தந்தையுந் தாயும் சமயப்பற்றுடையவர்; அறநூல்களை ஓதுபவர். அன்னார் தம் புதல்வராகிய காந்தியை இளமையில் நாட்டுப் பள்ளியில் அமர்த்திக் கல்வி கற்பித்து வந்தனர்.

அங்கே காந்தியடிகளுக்குச் சமயக்கல்வி வழங்கப் பட்டது. பின்னர்க் காந்தியடிகள் ஆங்கில பாடசாலை சென்று ஆங்கிலம் பயின்றார். இளமையில் இவர் சமயக்கல்வி பெற்று வந்தமையால் பெற்றோர்க்கும் பெரியோர்க்குங் கீழ்ப்படிந்து நடத்தல் என்னும் அரிய தருமகுணம் இவரிடம் விளங்கிக்கொண் டிருந்தது.

## தாய்மொழி

காந்தியடிகள் தம்மை ஈன்ற அன்னையாரைத் தெய்வமாகவும், அவர் தம் வாய்மொழிகளை வேத மொழியாகவுங் கொண்டு போற்றி வந்தார்கள். இங்ஙனம் ஒழுகுவோர் உலகத்தில் பெரியோர் எனப் போற்றப்படுவர் என்பதிற் சந்தேகமில்லை. ஒருவனுக்குப் பெருமை தேடிக்கொடுப்பது அவ னிடத்துள்ள தாய் தந்தையர் பக்தியேயாகும். காந்தியடிகள் தாயாரைக் கடவுளாகக்கொண்டு அவர் சொல்லுக்கு என்றும் எங்குங் கட்டுப்பட்டு நடந்து வந்தார் என்பதை வலியுறுத்த அவரது வரலாற்றில் ஒரு குறிப்பை ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன்.

காந்தியடிகள் பிரவேச பரீட்சையில் தேறிய உடன் அவருக்கு இங்கிலாந்து சென்று சட்ட நிபுணராக (Barrister) வேண்டும் என்னும் அவா

தோன்றிற்று. ஆனால் காந்தியடிகள் அன்னையார் அவரை இங்கிலாந்துக்கு அனுப்ப ஒருப்படவில்லை. காந்தியடிகளுக்கு மாத்திரம் அவ்வவா அடங்கா திருந்தது. அதைக் குறிப்பாற்கண்ட அம்மை யார் ஒரு நாள் மகாத்மாவை நோக்கி, "மைந்தனே! உன் விருப்பப்படி நீ இங்கிலாந்து செல்வாயாக. ஆனால் நீ அங்கே மதுபானஞ் செய்தல், புலாலுண் ணல், வரைவின் மகளிர் இன்பந்துய்த்தல் என் னும் இம்மூன்று சோதனைகளுக்கும் 'உட்பட மாட்டேன்' என்று உறுதி மொழி கூறிவிட்டுச் செல்லலாம்" என்று கூறினர். காந்தியடிகள் "அம்முக்குற்றங்கட்கும் யான் உட்பட மாட் டேன்" என்று சத்தியஞ்செய்து கொடுத்து இங் கிலாந்து சென்றார்.

இங்கிலாந்தைப்பற்றி அம்மையார் கொண்டிரு ந்த எண்ணம் கவனிக்கத்தக்கது. இந்தியாவினின் றும் செல்லுவோர்க்கு இங்கிலாந்து இம்மூன்று தீட்சையும் செய்துவிடும் என்ற அச்சம் அம்மை யார்க்கு உண்டுபோலும்! அம்மையார் குறிப்பிட்ட மூன்றும் மக்களையும் மாக்களாக்கி விடுவனவாம். அத்தகைய இந்தியத் தாய்மார் இப்பொழுது எத் துணைபேர் இருக்கின்றனரோ?

காந்தியடிகள் இங்கிலாந்திலிருந்தபோது தாய் மொழியைக் குருமொழியாகப் போற்றி ஒழுக்கத்

தைப் பாதுகாத்தார். அவரோடு வாசிக்கும் ஒருசாலை மாணவர்கள் ஆடுவார்கள்; பாடுவார்கள். காந்தியெம்பெருமான் அவர்களோடு கலந்தும் கலவாமல் காலங்கழிப்பார்.

ஒருநாள் காந்தியடிகள் ஒரு நண்பரோடு ஒரு விருந்து மண்டபஞ் சென்றார். காந்தியடிகளுக்கு இங்கிலாந்தின் விருந்திலக்கணந் தெரியாது. அவர் என்னவோ கருதிக்கொண்டு நண்பரோடு போனார்; தோழரோடு உட்கார்ந்தார்; அங்கே வைக்கப்பட்டிருந்த புலால் குழம்பையும் பிறவற்றையும் பார்த்தார்; அதற்குமேல் நண்பரை ஏற இறங்க நோக்கினார். நண்பர் காந்தியடிகளைக் குறிப்பாக நோக்கி "இங்கே கவனிகக வேண்டிய சில ஒழுங்கு முறைகள் உண்டு. நீ காட்டு மிராண்டிபோல விழிக்கின்றாய். என்னை அவமானப் படுத்தாதே" என்று கூறினார். அப்பொழுது காந்தியடிகளுக்குத் தாய்மொழி நினைவிற்கு வந்தது. என் செய்வார்? நண்பரோ உறுத்து உறுத்துச் சீறுகின்றார். மற்ற விருந்ினருட் சிலர் கண்ணோட்டமுங் காந்தியடிகள் மீது சென்றுகொண் டிருக்கிறது. நண்பருக்குப் பயப்படுவதா? விருந்து மண்டபத்திருந்த புலையருக்கு (புலாலுண்போர்க்கு) அஞ்சுவதா? தாய்மொழியைக் காப்பதா? இச்சோதனைக்குக் காந்தியடிகள் அன்று எளியரா யிருப்பின், அவர்

மகாத்மாவாகி யிருப்பரோ? இரார்! இரார்!! இத்தகைய சிறு சோதனைகளுக்கு எளியராகி எத்துணை பேர் மனிதத்தன்மையை யிழந்து விடுகின்றனர்!!! காந்தியடிகள் "இவ்விருந்து மண்டபத்தில் நேரும் மான அவமானத்துக்கஞ்சி, இந்நண்பனைக் களிப்பிக்கவேண்டித் தாய் மொழியைக் காவாது விடுவது தருமமோ? சத்தியத்தைக் கடப்பது நியாயமோ?" என்று எண்ணி "என்ன நேரினும் நேர்க" என்று ஒதுங்கி வெளியே வந்துவிட்டார்.

இங்கேதான், மகாத்மா காந்தி மனித வாழ்க்கைக்கு அடிகோலினார். "அன்னையார் இந்தியாவிலிருக்கிறார். அவர் இங்கே நாம் செய்வதைப் பார்த்துக்கொண்டிருக்கிறாரோ? இல்லையே. நாம் விருப்பப்படி நடக்கலாம்" என்ற தீய - கொடிய - மிருக எண்ணம் காந்தியடிகள் உள்ளத்தில் உதயமாயிற்றோ? மனமென்னும் பேய்க்குரங்கு அவரை அலைத்ததோ? நமது ஆண்டகை, மனதை அறிவு வழியாக நிறுத்தி ஆண்டனர். மனதை யடக்கியாளாதவன் மனிதனாகான் காந்தியடிகள் இளமையில் இங்கிலாந்தில் ஒழுக்கத்தை உயிரினும் பாதுகாத்தது போற்றத்தக்கது. காந்தியடிகள் வாழ்விலுள்ள இவ்வொரு குறிப்பே மனிதராக விரும்புவோர்க்குப் பெருந்துணை செய்வதாகும்.

## இல்லறம்

மனிதன் வாழ்க்கைக்கு இன்றியமையாதது இல்லறம் 'இல்லறமல்லது நல்லற மன்று' என்பது ஆன்றோர்மொழி. காந்தியடிகள் இல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தே தம் வாழ்க்கையைத் தூய்மை படுத்திக் கொண்டார். மகாத்மா காந்தி தம் பன்னிரண்டாவது வயதில் உடலுக்கும் உயிருக்கும் துணை செய்யவல்ல ஓர் அம்மையாரை மணம் புரிந்தனர். இளமை மணம், ஒன்றிய காதலை ஊட்டுவதாகும். காந்தியடிகளின் மனைவியார் பெருமையைச் சொல்ல இயலாது. பண்டை இந்திய மாது சிரோமணிகளிடத்து நிரம்பியிருந்த குணங்களெல்லாம் அம்மையாரிடத்தில் பொருந்திக் கிடக்கின்றன. அம்மையார் 'கொழுநனே தெய்வம்' என்ற கொள்கையில் தலை சிறந்து விளங்குபவர். காந்தியடிகள் மகாத்மா ஆனதற்குக் காரணமாக நின்றது அம்மையாரின் கற்புத்திறனேயாகும். காந்தியடிகளும் அவரது இல்லக் கிழத்தியாரும், ஓரவிற்கு இருகோடு பூத்தாலன்ன, ஓருயிரும் ஈருடலுமாக உலகத்தில் வதிகின்றனர். அம்மையார் நம் முன்னோர் நாகரிகத்தையே கடைப்பிடித்தொழுகுகின்றனர். அவருக்கு எழுதப்படிக்கத் தெரியாதென்பதை கேள்வர்கள் கேட்டுப் பெருவியப் பெய்துவார்

கள். காந்தியடிகளுக்குப் பிள்ளைகள் உண்டு. காந்தியடிகள் இல்வாழ்க்கை யின்பத்தைப் பேரின்பத்துக்கு ஒப்பிடலாம்.

பண்டைக் காலத்தில் ஒவ்வொரு வீடும் கைலாயமாகவும் வைகுந்தமாகவும் இருந்தது. இப்பொழுது பிறநாட்டு அநாகரிகத் தீட்டால் இந்தியக் குடும்ப வாழ்க்கைகள் கெட்டு வருகின்றன. இக்காலத்தில் காந்தியடிகளின் இல்வாழ்க்கை பண்டை இந்திய வாழ்க்கைக்கு ஓரிலக்கியமாக நிற்கிறது ஆண்மக்கள் காந்தியடிகளின் ஒழுக்கத்தையும், பெண்மக்கள் காந்தியடிகள் மனைவியாரின் ஒழுக்கத்தையும் கடைப்பிடித்து வாழ்க்கையை நடத்துவார்களாக. காந்தியடிகள் இல்லறம் போன்ற இல்லறமும் மனித வாழ்க்கையைத் தூய்மைப்படுத்துவதாகும்.

## தியாகம்

காந்தியடிகள் ஒரு பெருஞ் செல்வரின் புதல்வர் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. காந்தியடிகள் சட்டப் பரீக்ஷையில் தேறி நிபுணராயினர். நியாய துரந்தரர்கள் கருத்துப் பொருளீட்டுவதிலேயே எப்பொழுதும் பதிந்து கிடக்கும். நியாய துரந்தரர்களில் பூரண ஒழுக்க முடையவரைக் காண்டல் அரிது. தெரிந்தோ தெரியாமலோ

பொய்மைக்குப் பாடுபடவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. அவர்கள் நாளடைவில் பொய்மை என்பது தீயொழுக்கத்தின் பாற்பட்டதன்று என்ற எண்ணமுடையவர்களாகிறார்கள். பழக்கம் கொடியதன்றோ? அவர்கள் என் செய்வார்கள்!

மகாத்மா காந்தி சட்டப்பரீட்சையில் தேறினார்; பட்டமும் பெற்றார்; அவர் மன்றங்களில் பேசும் உரிமையும் பெற்றார். ஆனால் அத்தொழிலில் அவர் நீண்டநாள் நிலைத்திருக்கவில்லை. அறவொழுக்கம்பூண்டோர் அத்தொழிலை நஞ்செனவெறுப்பர். திலகர் பெருமானும் அத்தொழிலில் தலைப்படாமல் தூயராக வாழ்ந்து வந்தார். காந்தியடிகளுக்கும் பாபவாத வேலையை விடுத்து விலக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அஃது இறைவன் செயலேயாகும்.

காந்தியடிகள் ஒரு வழக்கை முன்னிட்டுத் தென்னாப்பிரிக்காவுக்குச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது அங்கே நம் இந்தியர்கள் பட்டுக்கொண்டிருந்த கஷ்டத்தை என்னென்று எழுதுவது? இந்தியர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள்; அவர்கள் மனிதர்களாகப் பாவிக்கப்படவில்லை. தென்னாப்பிரிக்காவில் பார்த புதல்வர்கள் வனவிலங்குகளினும் தாழ்வாகக் கருதப்பட்டார்கள்.

வன விலங்குகளுக்குள்ள சுதந்தரமும் இந்தியர்களுக்கு அங்கில்லாமலிருந்தது. கொல்லா விரதங்கொண்ட பெரியாராகிய காந்தியடிகள், சகோதரர்கள் வெயிலிடைப்பட்ட புழுவெனப் படும் கஷ்டத்தைக் கண்டார்; கண்ணீர் விட்டார்; கசிந்து கசிந் துருகினர். "நாட்டை விடுத்து, நகரத்தைவிடுத்து, உற்றாரை விடுத்து, உறவினரை விடுத்து, இந்நாட்டிற் குடியேறிப் பாம்பின் வாய்ப்பட்ட தவளைபோல் வருந்தும் இச் சகோதரர்களுக்கன்றோ யான் இனி உழைக்க வேண்டும்! இஃதன்றோ இறைவன் பணி! இதன் பொருட்டே நான் படைக்கப்பட்டேன்" என்ற ஞான உணர்ச்சி அடிகளுக்குத் தோன்றிற்று.

அடிகள் அருச்சுனனைப்போல இருபிறப்பாளராயினர். சட்டப்படிப்பையும் பட்டத்தையும் மகாத்மா காந்தி யுதறினர்; நடமாடும் கோயில்களாகிய உயிர்களுக்குப் பணி செய்யத் தொடங்கினர். இங்கேதான் காந்தியடிகள் மனிதராயினர். காந்தியடிகள் தென்னுப்பிரிகாவிலிருந்த நம் சகோதரர்கள் உயிரைத் தம் உயிராகக் கொண்டார்; அவர்கள் உடலங்களைத் தம் உடலாகப்போற்றினர்; அன்னர் துன்பங்களைத் தம் துன்பமாகக் கருதினர். மகாத்மா அவர்கள் தென்னுப்பிரிக்கா இந்தியர்கள் வருத்தத்தை யொழிக்க முயன்றனர்

கள். ஆனால் நம் பெரியார் இந்தியர்களை வருத்திய வெள்ளையர்களுக்குக் கேடு சூழக்கருதவில்லை. பிரிட்டிஷ் ஆப்பிரிக்காவிலிருந்த வெள்ளையர்கள் இந்தியர்களைப் பல வழியிலும் வருத்தித் துன்புறுத்தியதைக் காந்தியடிகள் போயர் சண்டையில் பாராட்டாமல் பிரிட்டிஷாருக்குப் போதிய உதவி புரிந்தனர்; புரிவித்தனர். யுத்த காலத்தில் காந்தியடிகள் வன்மங்கொள்ளாது பிரிட்டிஷ் சேனைகளுக்கு உதவி புரிய முன்வந்ததை யோசிக்குங்கால், காந்தியடிகளின் பெருந்தகைமை நன்கு புலனாகும். தேசத்தாருக்குச் செய்ய வேண்டிய கடமையைத் தேசத்தாருக்கும், மன்னருக்குச் செய்ய வேண்டிய கடமையை மன்னருக்குஞ் செய்ய வேண்டுவது தேசபக்தர்கள் கடமை.

போயர் சண்டை முடிவடைந்தது. சண்டையில் பிரிட்டிஷாரே வெற்றி பெற்றனர். ஆனால் இந்தியர் தென்னாப்பிரிக்காவில் மனிதருக்குரிய சுதந்தரத்தைப் பெற்றனரோ? சண்டை முடிவடைந்த பின்னருந் தென்னாப்பிரிக்கா இந்தியர் அடிமைகளாகவே பாவிக்கப்பட்டனர். பிரிட்டிஷாருக்கு விரோதமாகச் சண்டைசெய்த போயர் பெற்ற சுதந்தரத்தையும், பிரிட்டிஷாருக்கு உதவிபுரிந்த இந்தியர் பெறவில்லை. போயர்கள் நம் சகோதரர்களைப் பல வழியிலும் இடர்ப்படுத்தினார்கள்;

பிறப்புரிமையை யழிக்கக் கூடிய பத்திரங்களில் இந்தியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து அங்கு வாழவேண்டுமென்று கட்டளை பிறப்பித்தார்கள். நம் சகோதரர்கள் ஊர் ஊராகத் துரத்தப்பட்டார்கள். அவர்கள் வனவிலங்குகள்போல் வேட்டையாடப் பட்டார்கள் என்றுங் கூறலாம். மகாத்மா காந்தியடிகள், சகோதரர்கள் துன்பத்தை ஒழிக்கத் தம்மால் கூடிய அளவு உதவிபுரிந்து வந்தார்கள். தம்மிடத்திருந்த பொருளையெல்லாம் நம் சகோதரர்களுக்குச் செலவழித்தார்கள். மகாத்மா நம் இந்திய ஏழைக் கூலிகளைப் போல வாழ்க்கையை நடாத்திவந்தார். ஏழைகள் உறங்கும் குடிசையிலேயே தாமும் உறங்கினார்; அவர் குடித்த கூழையே தாமுங் குடித்தார். தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்திய சகோதரர்களும் காந்தியடிகளைத் தங்கள் உயிராகவே கருதினார்கள்; அவரது சொல் வழி நடக்கவும் ஒருப்பட்டார்கள்.

காந்தியடிகள் மக்கள் உரிமையையுந் தருமத்தையுங் காக்கும் பொருட்டுக் கையாண்ட பொறுமை எதிர்ப்பின் திறத்தை என்னென்பேன்! என்னென்பேன்!! அவர், தம்மைப்போல ஆயிரக்கணக்கான இந்தியர்களைப் பொறுமை எதிர்ப்பைக் கையாளச் செய்வித்தனர். அவர் எத்தனை முறை சிறை புகுந்தனர்? எத்தனைநாள் பட்டினி கிடந்தனர்?

இத்துணைத் துன்பத்துக்கு உட்பட்டும் காந்தியடிகள் பொறுமையைக் கைவிடாது, அதைக்காத்து வந்ததை நேயர்கள் கவனித்தல் வேண்டும். நல்லொழுக்க முடையோர்க்குப் பொறுமை யென்னும் அரியபொருள் எளிதில்கைகூடும். பொறுமை கைவரப்பெறுவோர்க்கு ஆன்ம விளக்கம் உண்டாதல் இயல்பு. ஆன்ம விளக்கம் பெற்ரோர் எவ்வகைத் துன்பத்தையும் இன்பமாகக் கொள்வர். அவர்களுக்கு இன்ப துன்ப வேற்றுமை தோன்ரு. தென்னப்பிரிக்கா வெள்ளையர்கள் செய்த கொடுமையும், அதனுல் இந்திய சகோதரர்கள் ஏற்ற துன்பமுங் காந்தியடிகளை மகாத்மாவாக்கின. ஓர் ஆப்கானியன் காந்தியடிகளை ஒரு முறை மிக உரமாகத் தாக்கிப் புடைத்தான். அப்பொழுது காந்தியடிகள் உணர்ச்சியையும் இழந்துவிட்டார்; சிறிதுநேரம் கழித்துத் தெளிவடைந்து எழுந்தார். போலீஸ் அதிகாரியொருவர் "தங்களை உதைத்த ஆப்கானியனைப் பிடித்துக் காப்பில்வைத்து விசாரணை புரியத் தங்கள் கட்டளை வேண்டும்" என்று கேட்டார். காந்தியடிகள் "என்னைப் புடைத்த ஆப்கானியனுக்கு எவரும் ஒரு தீங்குஞ் செய்யக் கூடாது" என்று ஆண்டிருந்த பலரையும் வேண்டிக்கொண்டனர். இத்தகைப் பொறுமை வடிவத்தைத் தெய்வமென்றுங் கூறலாமன்ரே? ஆ! ஆ!!

காந்தியடிகளின் வாழ்க்கையே வாழ்க்கை!!! பிறர் பொருட்டுத் தம் என்பைக் கொடுத்தவர் - உயிரைக் கொடுத்தவர் கதைகள் நூல்களிலிருக்கின்றன. தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் மனிதர் ஒருவர் இந்நாளில் கண்கூடாக விளங்குகிறார்! "கிறிஸ்து ஒரு முறை சிலுவையிலறையப்பட்டுத் துன்புற்றார். காந்தியடிகளோ அத்தகைத் துன்பத்தைப் பன்முறையும் ஏற்றுக்கொள்கிறார்" என்று கிறிஸ்தவ பாதிரிமார்களும் காந்தியடிகளின் ஆத்ம தியாகத்தைப் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் பிறர் பொருட்டுப்பட்ட கஷ்டங்களின் விரிவை அவரது சரிதத்திற் காண்க.

மனித வாழ்க்கைக்கு ஆத்மதியாகம் இன்றியமையாத தென்பதைத் தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் ஆற்றிய அருஞ்செயல்கள் நன்கு வலியுறுத்தும்.

## அஞ்சாமை

மஹாத்மாகாந்தி காசியில் ஹிந்து சர்வகலா சாலை திறக்கப்பட்டபொழுது ஓர் அரிய உபந்நியாசஞ் செய்தார். அப்பொழுது நம் நாட்டு மஹாராஜாக்கள், ராஜாக்கள், சிற்றரசர்கள், அரசகுமாரர்கள், ஜமீன்தார்கள், பட்டதாரிகள், சாஸ்திரிகள், பண்டிதர்கள் முதலியோர் அவையில்

குழுமி யிருந்தனர். அவர்கள் நடுவில் அகப்பற்றப் புறப்பற்றுக்களை அறவே ஒழித்துப் பிறர்க்குழைக்கும் பற்றையே தமக்குரிய பற்முகக் கொண்டு, மனிதராகிய காந்தியடிகள் உபந்நியாசம் புரியத் தொடங்கினர்கள். அவ்வுபந்நியாசம், தொடக்கத்திலேயே ஆண்டிருந்த செல்வர்களையும் கல்வியாளரையுங் கலக்கிவிட்டது. அதற்கு அஞ்சா நெஞ்சுடைய அன்னிபெசண்ட் அம்மையாரும் அஞ்சி அவையைவிட்டு நீத்தனர். அம்மையாரையே நடுக்குறச் செய்த உபந்நியாசம் பிறரை எங்ஙனம் அலமரச் செய்திருக்கு மென்பதை வருணிக்கவும் வேண்டுமோ? உபந்நியாசஞ் செய்தவர் பொன்னையும் பொருளையும் பொருளாக மதியாத மனிதர்; நடுநிலை வழாது உள்ளதை உள்ளவாறு கூறும் உண்மையாளர்; கடவுளால் படைக்கப்பட்ட மக்களனைவரும் சகோதரர் என்னுங் கொள்கையுடையவர். உபந்நியாசங் கேட்டவருள் பெரும்பாலோர் ஆன்ம விளக்க மில்லாதவர்; தோன்றி நின்றழியும் உடலைப் பொருளாக்கொண்டு அதனை அழகுசெய்து இன்புறுவோர். உபந்நியாசகர் இயற்கை இன்பத்தில் திளைப்பவர். உபந்நியாசங் கேட்டவருள் பலர் செயற்கை யின்பத்தில் தோய்பவர். முன்னவர் பிறர்பொருட்டு வாழ்பவர்; பின்னவர் தம்பொருட்டு வாழ்பவர்.

இருவர்க்கும் பல வகை வேற்றுமைகள் உண்டு. வேற்றுமை உண்மையான் காந்தியடிகள் உரை மன்னவர்க்கும் மற்றவர்கட்கும் நஞ்சாகத் தோன்றிற்று.

மகாத்மா ஆண்டிருந்த மன்னர்களையும் மற்றவர்களையும் பார்த்து "நீங்கள் ஏன் முடிகளையும், அணிகளையும் தாங்கிக்கொண்டிருக்கிறீர்கள்? பிறநாட்டார் உங்கள் அணிகலன்களைக்கண்டு, 'இந்தியா செல்வநாடு' என்றன்றோ சொல்வர்? அன்றோர் உங்களால் இந்தியாவின் வறுமையை உணராமல் ஒழிவர். இவ்வாபரணங்களெல்லாம் உங்களுக்குச் சுமையாகத் தோன்றவில்லையா? அவைகளை ஏழைகள் வயிற்றிற்குப் பயன்படுத்தலாகாதோ?" என்று பேசினார். இஞ்ஞான உரைகள் - அற உரைகள் - அன்புமொழிகள் - அருள்மொழிகள் - அவையில்லார்க்கு வெறுப்பையே உண்டாக்கும். காந்தியடிகளின் தெள்ளிய உரைகள் ஆண்டிருந்த திருவுடையாரை மகிழச் செய்யவில்லை. மகாத்மா காந்தி மன்னர்களின் மகுடங்களையும், அவைகளில் பதிக்கப்பெற்றுள்ள மணிகளையுங் கண்டதும் அவருக்கு ஏழைகள்மேல் எண்ணஞ் சென்றது; பாரதமாதாவின் மீது நினைவு சென்றது. காந்தியடிகளுக்கு அவ்வணிகள் சுமையாகத் தோன்றின. மற்றவர்கட்கோ அவை அணியாகத் தோன்றின.

இதுவே மனிதருக்கும் (மக்களுக்கும்) மற்றவர்கட்கும் (மாக்களுக்கும்) உள்ள வேற்றுமை. மகாத்மா அவர்கள் ஹிந்து சர்வகலாசாலைத் திறப்பு விழாவில் திருவுடையவர்கட்குத் தங்கள் பொன்னையும் பொருளையும் பிறர்க்குப் பயன் படுத்துமாறு அறிவுறுத்தியது கவனிக்கற்பாலது. மன்னர்கள், பட்ட தாரிகள் என்று அஞ்சி நடுக்குறுது அவர்களுக்கு அறிவு கொளுத்துத் துணிந்தூஉம் போற்றத்தக்கதே. மகாத்மாவின் உள்ள நிலையை ஹிந்து சர்வ கலாசாலைத் திறப்பு விழாவில் அன்னி பெசண்ட் அம்மையார் உணரவில்லை. அன்னி பெசண்ட் அம்மையார் நாளடைவில் காந்தியடிகளின் உள்ள நிலையை அளந்தறிந்திருப்பதாகத் தெரிகிறது. சென்னைக் கோகலே மண்டபத்தில் காந்தியடிகள் திருவுருவப்படம் திறக்கப்பட்ட போது அன்னி பெசண்டம்மையார் "இத்திறப்பு விழாவை மகாத்மாகாந்தி கேள்விப்படுவாராயின், அது வேண்டாம் என்று தடுப்பர்" என்று பேசினர். (இப்பொழுது அன்னி பெசண்ட் அம்மையார் அறிவு முன்னை வினையால் மீண்டும் மருளில் வீழ்ந்து கிடக்கிறது. இதுகாலை அம்மையார்க்குக் காந்தியடிகளின் அருட்செயல் மருட்செயலாகத் தோற்றுவது காலக்கொடுமையோ அல்லது அவரது முன்னைப்போ அறிகிலேன்.)

## கடவுள்காட்சி

காந்தியடிகள் பேஹாரிலுள்ள சாம்பரான் என்னுமிடத்தில் தொழிலாளர்கள் மேல்நாட்டு முதலாளிகளால் வருத்தப்படுவதாகக் கேட்டு உண்மை தேற ஆண்டுச் சென்றனர். காந்தியடிகளின் உண்மை நிலையை உணராத ஜில்லா மாஜிஸ்டிரேட், காந்தியடிகளின் வரவால் சாம்பரானின் அமைதி குலைந்து அபாயம் விளைந்துவிடுமென்று கருதி, அடுத்த வண்டியிலேயே (Train), அவரைப் புறப்பட்டுச் செல்லுமாறு காந்தியடிகளுக்கு ஒரு கட்டளை பிறப்பித்தார். மகாத்மா, கட்டளையைக் கண்டார்; உற்று நோக்கினர். "யான் இறை பணிசெய்ய (ஏழைகளுக்கு உழைக்க) ஈண்டுப் போந்துளேன். யான் இவ்வூரை விட்டுப் போகேன். மாஜிஸ்டிரேட் கட்டளையை மீறியதற்கு நேரும் தண்டனையை யேற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்" என்று காந்தியடிகள் பதில் இறுத்தார்கள். காந்தியடிகள் ஆன்மஞான உறுதியுடையவர் என்பதை வலியுறுத்த இஃதொரு சான்றாக நிற்கிறது. பிறர் பொருட்டு வாழவேண்டுவதே பிறவிப் பயன் என்ற மெஞ்ஞானத்தைப் பெற்றுள்ள காந்தியடிகள் [illegible] நிப் பிறந்த கட்டளைக்கும் இடம்படுவரோ? அக் கட்டளைக்கும் இடம்படுதல் ஆண்டவன் ஆணை

க்குமாறாக நடப்பது ஆகும். ஆண்டவன் ஆணை ஏழைகள் துன்பத்தைக் கேட்டு அதை ஒழிக்குமாறு காந்தியடிகளைத் தூண்டுகிறது. அதிகாரி ஆணை அதை மறிக்கிறது.

காந்தியடிகள் ஆண்டவன் ஆணைவழியே சென்றார்கள். ஆன்மசக்தி கைவரப்பெற்றோர் நியாயத்திற்கு மாறாக எவர் கட்டளை பிறப்பினும் அதற்கு அஞ்சார்; கீழ்ப்படியார். இச்செயலே மனிதவாழ்க்கைக் குரியது. ஓர் அதிகாரியின் ஆணைக்கு அஞ்சி ஓன்பதினாயிரம் ஏழைகளை வஞ்சிப்பது பெரும்பாவம். ஏழைகள் பொருட்டு எத்தகைத் துன்பம்வரினும் அதைத் தாங்கச் சித்தமாயிருப்பவர் கடவுள் பக்தராவர். நியாயத்திற்கும் உண்மைக்குங் கட்டுப்பட்டுச் சிறை புகுவது மோட்ச லோகத்துக்குச் செல்வதை யொக்கும். அதிகாரியின் ஆணைக்கு அஞ்சி மனமுடைந்து ஆண்டவன் பணிக்கு இடையூறு செய்வோர் சுயநலமுடையோராவர். மலைவந்து தலையில் வீழினும் மனநிலை கலங்கப்பெறாதவர் மனிதராவர். கடவுள் ஆணைவழி நின்று அதிகாரி ஆணையை மறித்து காந்தியடிகளை, அவருள்ளத்துள்ள உண்மைப்பொருள் காட்டிக்கொடுத்ததா? இறைவன் பொருட்டுத் தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படியாத பிரகலாதனுக்கு இடர்

சேர்ந்ததோ? ஈசன்மீது பாரத்தைச் சுமத்திச் சிவ போதமுற்றிருப்பவர்க்கு ஒரு நாளும் இடுக்கண் நேராது.

சாம்பரான் மாஜிஸ்ட்ரேட் தம் கட்டளையை மறுத்த காந்தியடிகள்மீது நியாய விசாரணை தொடங்கினர். காந்தியடிகள் வழக்கை வளர்த்துக்கொள்ள வில்லை; வக்கீல்களைத் தேடவில்லை; வலிந்து வந்த வக்கீல்களையும் தமக்காகப் பேச வொண்ணுதவாறு தடுத்துவிட்டார்கள். மாஜிஸ்ட்ரேட் எதிரில், பொறுமைப் பொருளாகிய காந்தியடிகள் நின்றுகொண்டு "யான் எனதுகடமையைச் செலுத்த வந்தேன். அதைத் தடுக்கத் தாங்கள் உத்தரவு பிறப்பித்து விட்டீர்கள். உலக ஆட்சி முறை வழியாகப் பிறந்த கட்டளைக்கு யான் கீழ்ப் பட உடன்படாதது குற்றமே" என்று கூறினர். காந்தியடிகளின் வாக்கினின்றும் பிறந்த அருள் மொழிகளை மாஜிஸ்ட்ரேட் செவி மடுத்தார்; தீர்ப்பைச் சொல்லாது நிறுத்திவிட்டார். சின்னாள் கடந்ததும் மேல் அதிகாரிகளிடமிருந்து, காந்தியடிகள்மீது பிறப்பிக்கப்பட்டிருந்த கட்டளையை விலக்கிவிடுமாறு மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கட்டளை பிறந்தது. மாஜிஸ்டிரேட் என் செய்வார்? பொறுமை எதிர்ப்பிற்கு முன் பிற எதிர்ப்புகள் என் செய்யும்? அதற்குமேல் காந்தியடிகள் சாம்பரான்

தொழிலாளர் துன்பங்களை விசாரணை புரியும் உரிமை பெற்றார். பின்னர்ச் சாம்பாரான் தொழிலாளரது துன்பம் ஒருவாறு ஒழிந்தது.

காந்தியடிகள் ஜில்லா அதிகாரியின் ஆணைக்குப் பயந்து சாம்பாரானுள் நுழையாது சென்றிருப்பாராயின், ஆண்டிருந்த தொழிலாளர் துன்பம் ஒழிந்திருக்குமோ? ஈசன் பணிக்கு எவர் இடையூறிழைப்பினும் அஞ்சுதலாகாது. ஈசன் பணியாவது, பயன் கருதாது பிறர்க்கு வேலை செய்வதாகும். இதுவே நிஷ்காமிய கருமயோகம் எனப்படும். காந்தியடிகள் சாம்பாரானில் காட்டிய ஆத்ம சக்தியை மனிதராக விரும்புவோர் கவனிப்பாராக.

## உண்ணாவிரதம்

ஆமதாபாத்தில் நெசவுத் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. அவைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆமதாபாத்தில் 1918-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொள்ளை நோய் (பிளேக்) அதிதீவிரமாயெழுந்து ஜனங்களை வருத்தத் தொடங்கிற்று. அதனால் நெசவுத் தொழிலாளர் பலர் கிராமங்களுக்குச் செல்ல உத்தேசித்தனர். அது கண்ட தொழிற்சாலை அதிகாரிகள் தொழிலாளர்களுக்கு நூற்றுக்கு எழுபது வீதம் சம்பளம் உயர்த்துவதாகக் கூறினார்கள். பணப் பித்துக்கொண்ட தொழிலா

ளருள் பெரும்பாலோர் கிராமங்களுக்குச் செல்லாது நின்றுவிட்டனர். கொள்ளை நோயின் வேகங் குன்றப்பெற்றதுந் தொழிற்சாலைத் தலைவர்கள் தாங்கள் தொழிலாளர்களுக்கு உயர்த்திய சம்பளத்தை நிறுத்திவிட்டார்கள். அது காரணமாகத் தொழிலாளர், வேலை நிறுத்தஞ் செய்தனர். முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பலவகை விவாதங்கள் நடந்தேறின. முதலாளிகள் நூற்றுக்கு இருபது விதம் சம்பளத்தை உயர்த்துவதாகச் சொன்ஞர்கள். தொழிலாளர்கள் நூற்றுக்கு ஐம்பது கேட்டார்கள். இருவரும் எவ்வித முடிவிற்கும் வரவில்லை. காலங் கடந்து கொண்டே சென்றது. தொழிலாளர்களோ கஷ்டப்படுகிருர்கள். முதலாளிகளோ பிடிவாதத்தை விடவில்லை. கலக்கமுங் குழப்பமும் பரவத் தொடங்கின.

ஆமதாபாத்திலுள்ள காந்தியடிகளுக்கு இச் செய்திகளெல்லாம் எட்டின. ஜீவகாருண்யத்திற் சிறந்த மகாத்மா அவர்கள் தொழிலாளர் துக்கத்தைக் கேட்டு வாளாவிருப்பார்களோ? அவரது ஆத்ம சக்தி அவரைத் தூண்டிற்று. காந்தியடிகள் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நடுநின்று நியாயம் பேசி நூற்றுக்கு முப்பத்தைந்து விதம் கூலியை உயர்த்துமாறு ஏற்பாடு செய்தனர். அவ்வேற்பாட்டுக்கு முதலாளிகள்

இணங்கவில்லை. அது கண்ட மகாத்மா "இத் தொழிலாளர் ஒரு நாளாவது நூற்றுக்கு முப்பத் தைந்து வீதம் சம்பளம் பெறமட்டும், யான் உணவு கொள்வதில்லை" என்ற விரதங்கொண்டு ஏறக்குறைய ஒரு வாரம் அவ்வுறுதி நிலையில் நின்றார். முதலாளிகள் காந்தியடிகளை மகாத்மா என்று அப்பொழுது தான் உணரப் பெற்றார்கள். அவர்கள் வாளா கிடப்பினும் அவர்கள் உள்ளத் துள்ள இறைவன் வாளா கிடப்பனோ? உடல் பொருள் ஆவி மூன்றையும் மற்றவர் பொருட்டு அர்ப் பணஞ் செய்வாரைக் காக்கிறவன் ஆண்டவ னல்லனோ? ஆண்டவனருளால் முதலாளிகள் தங் களை யறியாமலே காந்தியடிகள் பாலணுகி "தங் கள் விருப்பப்படியே ஒருநாளுக்கு நூற்றுக்கு முப் பத்தைந்து விகிதமும், மற்ற நாட்களுக்கு நூற் றுக்கு இருபத்தேழு விகிதமும் கொடுக்கிறோம். நாளடைவில் சிறிது சிறிதாக நூற்றுக்கு முப்பத் தைந்தே உயர்த்தி விடுகிறோம். தாங்கள் உணவு கொள்ளல் வேண்டும்" என்று வேண்டிக்கொண் டார்கள். அதற்கு மேல் மகாத்மா அவர்கள் உணவு கொண்டார்கள். இப்பொழுது ஆமதா பாத் தொழிலாளர்கள் முப்பத்தைந்தையுங் கடந்து நாற்பதுக்கு அதிகமாகப் பெறுகிறார்கள். காந்தி யடிகளின் ஜீவகாருண்யத்தையும் பொறுமை எதிர்ப்

யையும் என்னென்று புகழ்வது? ஏழைகள் பொருட்டு உண்ணு விரதங் கொள்வோர் இக் காலத்தில் எத்துணைபேர் இருப்பர்? ஆத்மவிளக்க முடையோர் செய்ய முடியாத காரியமொன்று மில்லை.

### பொறுமை எதிர்ப்பு

இவ்வருஞ்செயல் முற்றுப் பெற்ற இரண்டு மாதங்களுக்குள் மகாத்மா அவர்கள் மற்றோர் அருஞ் செயலில் தலைப்பட நேர்ந்தது. பம்பாய் மாகாணத்தில் கெய்ரா ஜில்லா என்றொரு ஜில்லா விருக்கிறது. 1918 - ஆகஸ்டில் அந்த ஜில்லா வில் விளைவு குறைந்தது. அரசாங்கத்தார் விளைவு குறைவைக் கவனியாது வழக்கம் போல வரிவாங்கத் தொடங்கினர். ஏழைக் குடிமக்கள் என் செய்வார்கள் பாவம்! அவர்கள் துக்கத் தைக் கேட்டு மகாத்மா காந்தி கெய்ரா ஜில்லா சென்று உண்மை கண்டு விளைவுக்குத் தக்கவாறு வரி வாங்குதல் தருமமென்று அரசாங்கத்தாரிடம் நியாயப் போர் புரிந்தார். அரசாங்கத்தார் காந்தி யடிகள் உரைக்குச் செவி சாய்க்க ஒருப்பட வில்லை. அதைக்கண்ட காந்தியடிகள் தமது ஆத்ம சக்தியைக் கெய்ரா ஜில்லா முழுவதும் வீசி னார்கள். எல்லோரும் பொறுமை எதிர்ப்பைக் கைக்கொண்டனர். பெண்மக்களும் காந்தியடி

கள் உபதேச வழி நின்றார்கள். அரசாங்கத் தார் நிலங்களையும், வீடுகளையும், மாடுகளை யும், தட்டுகளையும், முட்டுகளையும் ஏலம் போட் டுத் தம் விருப்பப்படி நடந்தனர். எதற்கும் கெய்ரா ஜில்லா வாசிகள் அசையவில்லை. இறு தியில் "தீர்வை கட்டக் கூடியவர் கட்டலாம், முடியாதவர் கட்டவேண்டுவதில்லை" என்ற கட் டளையை அரசாங்கத்தார் பிறப்பித்தனர். கெய்ரா ஜில்லாவில் நடைபெற்ற பிறநிகழ்ச்சி முறைகளை அடிகளது வரலாற்றிற் காண்க. காந்தியடிகளின் ஆத்மசக்தி ஒரு ஜில்லாவையும் கட்டுப்படுத்தி அரசாங்கத்தாரையும் இணங்கச் செய்தது. உண் மையையும் அஞ்சாமையையும் விரதமாகக் கொண்டவரால் செய்ய முடியாத செயலு முளதோ ?

காந்தியடிகள் இச்செயல்களைச் செய்தமையால் அரசாங்கத்தாருக்கு மாறாக நடந்ததாகக் கொள் வது அறியாமை. அரசாங்கத்தார் முறை பிறழ்ந்து செல்லுங் காலத்து அவருக்கு உண்மைகொளுத்தி அவரைத் திருத்தவேண்டுவது அறிவுடையோர் கடமை. (அரசாங்கத்தாருக்குப் பயந்து அதரும வழியைக் கடைப் பிடிப்போர் எவராயினும் அவர் இழ்மக்களேயாவர். அவரை இராஜபக்தியில்லாத வர் என்றுங் கூறலாம்.) மகாத்மா கடமை என்

பதை நன்கு உணர்ந்தவர். அவர் எவ்வெக் காலத்து எவ்வெக்கடமையைச் செய்யவேண்டுமோ அவ்வக்காலத்து அவ்வக் கடமையைச் செய்யும் பெரியார் என்பதை உலகம் அறிவதாக.

## பிற குறிப்புகள்

ஐரோப்பாவில் நடந்தேறிய தரும யுத்தத்திற்கு மகாத்மா காந்தியவர்கள் ஆட்களைச் சேர்த்து அனுப்பினார்கள்; தம்முடைய புத்திரர்களையும் அனுப்பினார்கள். இதனால் மகாத்மா காந்தியவர்கள் ஒரு சார்பாக நின்று நடுநிலையைக் கொல்லும் மிருக குணமில்லாத மனிதர் என்பது நன்கு தெரிகிறது. மகாத்மாக்கள் எப்பொழுதும் எவருக்குந் தீங்கு செய்ய மாட்டார்கள். சத்தியத்துக்குத் தங்கள் உயிரையும் இழப்பார்கள்.

காந்தியடிகள் நோயால் வருந்தி மெலிந்து படுக்கையில் கிடந்தநாளில் சென்னைத் தொழிலாளர் சங்கத்தார் "சென்னையில் இரண்டு பெரிய நெசவுச் சாலைகள் மூடப்பட்டமை காரணமாகப் பன்னிரண்டாயிரம் தொழிலாளர்கள் வருந்துகிறார்கள்; மகாத்மாவின் உதவிநாடுகிறார்கள்" என்று தந்தி கொடுத்தனர். படுக்கையிலிருந்த படியே காந்தியடிகள் தந்தியைப் படித்துப் பார்த்தார். பார்த்ததும் அவர் மனஞ் சென்னைத் தொழிலாளர் மீது சென்றுவிட்டது.

மகாத்மா தேக நிலையைக் குறித்து வருந்தினர். அவர் சென்னைக்கு வராவிடினும் அவாது ஆத்ம சக்தி அது காலை சென்னையிலேயே நிலவியிருந் தது. தேக நிலை குன்றி யிருந்தமையால் சென்னைத்தொழிலாளரைக் காந்தியடிகள் மறந்துவிட்டார்களோ? இல்லை! இல்லை!! தம் உயிரனைய நண்பருள் ஒருவராகிய ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் துரைமகனாரைச் சென்னைக்கு அனுப்பி அவர் வாயிலாக வேண்டுவ செய்தனர். இஃதன்றோ ஆன்ம உறுதியுடையார் இலக்கணம்? "இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் - கடனறி காட்சி யவர்" என்ற பொய்யாமொழிக்கு இலக்கியமாக வன்றோ நமது காந்தியடிகள் விளங்குகிறார்? மனித வாழ்க்கையை விரும்புவோர் காந்தியடிகள் வாழ்க்கையைப் பின் பற்றுவாராக.

காந்தியடிகள் தற்கால நாகரிகத்தை முற்றும் வெறுக்கிறார். தற்கால நாகரிகம் மக்களை யும் மாக்களாக்கும் இயல்பினை யுடையது என்று காந்தியடிகள் கூறுகிறார்கள். இயந்திரங்கள் வாயி லாகத் தற்கால மனித வாழ்க்கை நடத்தப்படுவதை மகாத்மா மறுத்துரைக்கிறார். மனித வாழ்க்கை இயற்கையின் வழியாக நடத்தப்பட வேண்டு மென்பது காந்தியடிகள் கொள்கை. "தற்கால மேல்நாட்டு வைத்தியசாலைகள் அமைப்பால் பலர்

தீயொழுக்கத்துக்கு எழுச்சிகொண்டு சிற்றின்பத்துக்கு எளியராகி நோய் வாய்ப்பட்டு, அந்நோயைக் குடும்பங்களிலும் பரவச் செய்து பல உயிர்களுக்குக் கேடு சூழ்ந்து வருகிறார். இச்செயலால் எத்தனையோ குடும்பங்கள் உலக இன்பத்தை நுகரா தொழிகின்றன * * * *" என்று ஒரு கடிதத்தில் அடிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். "தற்கால கல்வி டாக்டர்களையும், வக்கீல்களையும் * * * * பிறரையும் பெருகச் செய்கிறது. அக்கல்வி மனித வாழ்க்கைக்கு உரியதன்று * * * * இத்தகைய கல்வியை நம்மவர்கள் சுமார் ஐம்பது வருடமாகப் பயின்று வந்ததைப் பார்க்கிலும், நமது நாட்டுக் கல்வியைப் பயின்று வந்திருப்பார்களாயின் நமது நாடு செழிய நிலையுற்றிருக்கும்" என்ற மகாத்மாவின் கூற்றை அன்பர்கள் கவனிப்பார்களாக. "இந்தியா தற்கால நாகரிக வழிநின்று சுய ஆட்சி பெறுவதால் ஒரு பயனும் விளையாது. அதனால் மேல் நாட்டுக்குச் சென்று கொண்டிருக்கும் பொருள், இந்தியாவில் நின்று விடும். இதனால் இந்தியா முன்னேற்ற மடையாது. அது வேறொரு அமெரிக்கா தேசமாகிவிடும். உண்மையாக நம்மை ஆள்வது தற்கால நாகரிகம். அதை ஒழிக்க முயலவேண்டும்"; "ஐரோப்பாவும் தற்கால நாகரிகத்துக்கு இரையாகிறது. தற்கால நாகரிகத்

தால் ஐரோப்பா விழுங்கப் படுவதற்கு முன்னர் ஐரோப்பா நல்ல நிலைமையில் இருந்தது" என்று மகாத்மா பல விடங்களில் பேசியிருக்கிறார். காந்தியடிகள் தற்கால நாகரிகத்தை அறவே வெறுக்கிறார்கள். அதையும் மனிதராக விரும்புவோர் கவனிப்பாராக.

காந்தியடிகள் "இயந்திரத்தால் நெய்யப்படும் உடைகளை உடுத்தலாகாது" என்று தாங்கூறிய வாறு செய்கையிலும் அநுஷ்டித்து வருகிறார். காந்தியடிகள் தாம் தரிக்கும் உடையைத் தாமே கைத்தறியால் நெய்து கொள்கிறார். "ஒரு கொள்கை ஒருவன் உள்ளத்து எழுமாயின் அதை உலகத்துள்ள அனைவரும் தழுவவேண்டுமென்று அவன் எண்ணங்கொண்டு மனச்சோர்வு அடைதலாகாது. அவன் ஒருவனே அதைத் தழுவி நடத்தல்சாலும்" என்று மகாத்மாகாந்தி திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார். இவ்வுபதேசத்திற்கு உலகத்தைத் திருத்த வெளிவரும் ஒவ்வொருவருஞ் செவி சாய்ப்பாராக.

"ஒருவன் தன் தேகத்துக்கு வேண்டியவற்றைத் தானே செய்து கொள்ளல்வேண்டும். பிறர் தொண்டை எதிர்பார்த்தலாகாது" என்பது காந்தியடிகளின் உபதேசம். மற்றும் பல உபதேசங்களைக் காந்தியடிகள் உபந்நியாசங்களில் காண்க.

காந்தியடிகள் பெரிதும் இயற்கைப் பொருளையே உண்ண வேண்டுமென்னுங் கொள்கையுடையவர். காந்தியடிகள் பெரிதும் பழவர்க்கங்களை உண்கிறார்; தண்ணீரைப் பருகுகிறார். ஆவின்பால் நெய் முதலியவற்றை அவர் உண்பதில்லை. கீதையில் கண்ணபிரான் "உணவிற்கேற்றவாறு மனிதன் குணங்கள் அமைகின்றன" என்று கூறியிருக்கிறார். சத்துவகுணத்தைப் பெற விரும்புவோர் பழம் முதலிய சத்துவ உணவுகளை உண்டு கழிக்கவேண்டும். ஆன்ம விளக்கத்துக்குச் சத்துவ குணம் இன்றியமையாதது. ஆனதுபற்றி மனித வாழ்க்கையை விரும்புவோர் சத்துவ குணத்தை உண்டாக்கும் உணவுகளைக் கொள்ளல்வேண்டும். காப்பி, தேயிலை இவைகளின் பானமும், புலாலுணவும் சாந்த குணத்தைக் கெடுப்பவை என்று அளவில் குறிப்பிட்டு விடுகிறேன்.

காந்தியடிகள் தோலால் செய்யப்படும் எவ்வித பொருளையும் உபயோகிப்பதில்லை என்பதும் கவனிக்கற்பாலது. காந்தியடிகள் செயலாலும் ஒழுக்கத்தாலும் ஜீவகாருண்ய வடிவினராயிலங்குகிறார்.

காந்தியடிகள் எச்சமயத்தைச் சார்ந்தவர் என்பதை நேயர்கள் அறிய அவாக்கொள்வார்கள். காந்தியடிகள் சமயம் "ஜீவகாருண்ய" சமயமாம்.

உலகத்தில் தோன்றிய எல்லாச் சமயாசாரியர்கள் போதனைகளையும் நன்கு ஆராய்ச்சி செய்யின், அவர்களது முடிந்த கொள்கை "அஹிம்சா பரமோதர்மா" என்ற கொள்கையா யிருக்கும். மனிதராகப் பிறந்தவர்கள் பிற வுயிர்களிடத்து இரக்க முடையவர்களாக வாழ்தல் வேண்டும். 'எல்லா உயிர்களிடத்துங் கடவுள் இருக்கிறார்' என்ற கொள்கை யுடையவராய், எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாது, அவ்வுயிர்களிடத்து அன்பு கொண்டு ஒழுகுவதே கடவுள் சமயமாகும். "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறைசிவனென்று - எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்று சைவ சமயநெறி கூறுகிறது. முழு ஜீவகாருண்ய முடைய ஒருவனைக் கடவுளாகவுங் கொள்ளலாம். மனிதப் பிறவி தாங்கினோர் கடவுளாக வேண்டுவரேல், அவர் அவலம்பித்து ஒழுகவேண்டிய சமயம் ஜீவகாருண்ய சமயமாம். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி—எல்லா உயிருந் தொழும்" என்று திருவள்ளுவர் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஜீவகாருண்ய மதப் பெருமையைப் பேசியிருக்கிறார். அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்ட சமயங்கள் யாவும் ஆராய்ச்சியில் ஜீவகாருண்ய சமயமாக முடியும். மனித வாழ்க்கைக்கு இன்றி

யமையாத சமயம் ஜீவகாருண்ய சமயம் என்று கூறலாம். அதனை மனிதரில் மனிதராகிய மகாத்மா காந்தி அனுஷ்டித்து வருகிறார். ஒவ்வொரு சமயத்தவரும் காந்தியடிகளைத் தஞ் சமயத்தவராகக் கருதுவர். இத்தகைய ஒரு சமயத்தை மனித வாழ்க்கையை விரும்புவோர் மேற்கொள்ளவேண்டும்.

### சத்தியாக்கிரகம்

காந்தியடிகள் தாம் எவ்வொழுக்க முறைகளைக் கைப்பற்றி மனிதராயினரோ, அவைகளை ஏனையோருங் கைப்பற்றியொழுகி மனிதராக வேண்டுமென்னுங் கைம்மாறற்ற கருணையால் "சத்தியாக்கிரகம்" என்ற ஓர் ஆசிரமத்தைத் தாம் உறையும் ஆமதாபாத்தில் கண்டிருக்கிறார்.

"சத்தியாக்கிரகம்" என்பதைத் தமிழில் "உண்மை கடைப்பிடித்தல்" என்று கூறலாம். சத்தியாக்கிரக ஆசிரமத்தில் மாணாக்கர்களுக்கு ஆன்ம விளக்க முற்றுத் தேகாத்ம வாதபுத்தி கெடவேண்டிய அறவொழுக்கங்கள் நன்கு போதிக்கப்படுகின்றன. சத்தியாக்கிரகத்தின் ஐந்து நியமனத்தைப்பற்றி (ஐம்பெரும் பாவங்கள் வழிப் புலன்கள் செல்லாதவாறு காக்கும் முறைகள்) மஹாத்மா காந்தி கூறியுள்ளதை (16—1—18) (17—1—18) "தேசபக்தன்" இதழ்களிற் காண்க.

"சத்தியாக்கிரக" ஆசிரமம் ஒவ்வொரு வீட்டிலும் பொலிய வேண்டுமென்பது எனது விருப்பம். மனிதர்களை மிருகமாக்கும் தற்கால நாகரிகமென்னும் விஷம் - பேய் - பூதம் - சண்டமாருதம் இந்தியாவை விட்டு அகல வேண்டுமாயின், காந்தியடிகளின் சத்தியாக்கிரக நியமனங்களை ஒவ்வொருவரும் அநுஷ்டிக்க வேண்டும். அம்முறையை அவலம்பித்து ஒழுகுவோர் அனைவரும் காந்தியாவர் என்பது நிச்சயம். அப்பொழுது புது இந்தியா ஒழிந்து பழைய இந்தியா மீண்டும் பரிணமிக்கும்.

சத்தியாக்கிரக ஆசிரமம் எங்கணுங் காணப் பெறல் வேண்டும். தேசபக்தர்கள் அனைவரும் - மனித தருமத்தை விரும்புவோர் அனைவரும் சத்தியாக்கிரக வளர்ச்சிக்கும் செழிப்பிற்கும் முயற்சி செய்யவேண்டும். இந்தியாவின் பூரண சுதந்தரம் சத்தியாக்கிரகத்தைப் பொறுத்து நிற்கிறது. மற்றைய வழிகளும், முயற்சிகளும் இந்தியாவிற்கு முழு உரிமையை வழங்கமாட்டா என்று உறுதி கூறலாம். இந்தியாவின் எதிர்கால நிலையை ஒழுங்குபடுத்திச் சுதந்தரம் பெற்று மனிதராக வேண்டுமென்னும் எண்ணமுடைய பிரமசாரிகள் எல்லாரும் சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து ஆன்ம விளக்கம் பெற முந்துவாராக.

காந்தியடிகள் சத்தியாக்கிரகப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருப்பதால் அதருமந் தலைகாட்டும்

பொழுது, அதை ஒடுக்கச் சத்தியாக்கிரக நெறி நின்று தருமயுத்தஞ் செய்ய முற்படுகிறார். சத்தியாக்கிரகிகளின் கடமை, சாதி குலம் சமயம் தேசம் முதலிய வேற்றுமை பாராட்டாது, எவ்வெவ்விடத்தில் மறந்தழைக்கிறதோ அவ்வவ்விடத்தில் அதைக் களைந்து, அறத்தை வளர்ப்பதாகும். நமது சத்தியாக்கிரகியாகிய காந்தியடிகள் இந்தியாவில் ரௌலட் சட்டந் தலைகாட்டியபோது தமது ஆத்மசக்தியால் அதை ஒடுக்க முயன்றதையும், இப்பொழுது பஞ்சாப் படுகொலைக்கும் கிலாபத்துக்கும் நியாயம் பிறவாமைகண்டு சத்தியாக்கிரகத்தின் ஒரு பகுதியாகிய ஒத்துழையா இயக்கத்தைக் கிளப்பியிருப்பதையும் ஈண்டுக் குறிப்பிடுகிறேன். இவ்வியக்கம் வெற்றி பெறின், உலகத்திலுள்ள மனிதர் வாழ்க்கை தூய்மையுறும் என்பதில் ஐயமில்லை. பாவச்செயலோடு ஒத்துழையாதிருப்பதும் மனித வாழ்க்கையின் நோக்கங்களுள் ஒன்று.

மகாத்மா காந்தியடிகள் வரலாறும், செயலும், ஒழுக்கமும் மனித வாழ்க்கைக்கு இலக்கியமாக இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் புலனாகும்.

இக்கட்டுரையில் மூன்று பொருள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப்பட்டிருக்கின்றன. அவை: (க) மனிதப் பிறவியின் மேன்மையும்,

எவன் மனிதன் என்பதும் (உ) ஒருவன் மனிதனுக் எத்தகை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டு மென்பது (ரு) மனித வாழ்க்கைக்கு இலக்கியமாக இப்பொழுது இந்தியாவிலிருப்பவர் காந்தியடிகள் என்பது.

சகோதரிகளுஞ் சகோதரர்களும் இம் மூன்று பொருளடங்கிய இச்சிறு கட்டுரையை நன்கு ஊன்றி வாசித்து, மகாத்மா காந்தியடிகளை மன மொழி மெய்களால் வழிபட்டு மனித தருமத்தை இந்தியாவின் வாயிலாக உலகத்தில் ஓங்கச் செய் வார்களாக. காந்தியடிகள் வாழ்க. வந்தேமாதரம்.